# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.402/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாகவேல் | த–பெ | சாத்தையா |
| ஊர்: | : | புதுவயல் | சமயம்: | |
| வயது: | : | 30/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கேபிள் தொழில் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2025**

**எதிரி ஆஜர்**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் புதுவயலில் வசித்து கேபிள் வேலை செய்து வருகிறேன். நான் எனது நண்பர் சுரேஷ் என்பவரும் 09.07.2015 அன்று எஸ்சலி கம்மாய் அருகில் நின்று கொண்டிருந்தபோது மாலை 6.00 மணியளவில் சாலை விபத்து ஒன்று நடந்தது. அது சம்பந்தமாக சாக்கோட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து விபத்து குறித்து விசாரணை செய்து டார்ச் லைட் வெளிச்சத்தில் வரைபடம் தயார் செய்து ஆவணம் ஒன்று தயார் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பந்தமாக எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் ஒரு கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். வரைபடத்தில் தெற்கு என்ன இருந்தது மேற்கு என்ன இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. சம்பவ இடத்தில் பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. வேறு ஏதாவது சம்பவ இடத்தில் குறியீடு செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்றால் வடக்கு பகுதியில் மரங்கள் இருப்பதாகவும் தெற்கு பகுதியில் மூங்கில் இருந்ததாகவும் கிழக்கு பகுதியில் செடி இருந்ததாகவும் மேற்கு பகுதியில் சூர முள் இருந்ததாகவும் இருந்தது. தெருவிளக்கு எங்கு இருந்தது என்றால் 100 மீ தொலைவில் இருந்தது. மின்கம்பத்தில் எந்த குறியீடுகளும் இல்லை என்று எனக்கு தெளிவாக தெரியும். நான் சொல்வது போல் எந்த பகுதிகளும் வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.17 17:44:07 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி.